# தொல்காப்பியம் காட்டும் மெய்ப்பாடுகள்

*செ. சங்கீதா*
முனைவர்பட்ட ஆய்வாளர்
ஏ.பி.சி. மகாலட்சுமி கல்லூரி தூத்துக்குடி

மலர்: 11

சிறப்பிதழ்: 2

மாதம்: ஜூலை

வருடம்: 2023

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.34293/sijash.v11iS2i3-July.6440

## முன்னுரை

***பண்ணைத் தோன்றிய எண்நான்கு பொருளும்***
***கண்ணிய புறனே நால்நான்கு என்ப.***
***(தொல்.பொருளதிகாரம்: 245, இளம்பூரணனார் உரை)***

மெய்ப்பாடு என்பது உள்ளத்து உணர்ச்சிகள் உடலில் தென்படுவது மெய்ப்பாடு. தொல்காப்பியம் பொருளதிகாரத்தில் உள்ள ஒன்பது இயல்களில் ஆறாவது இயலாக அமைந்திருப்பது மெய்ப்பாட்டியல் ஆகும்.

## மெய்ப்பாடுகள் தோன்றும் இடங்கள்

இந்த வகையான இடங்களை உரையாசிரியர்கள் சுவை என்கின்றனர். இவை உடலின் மெய்ச்சுவைகள். காதல் வாழ்க்கையில் காதலர்களிடையே தோன்றும் மெய்பாடுகள் அவத்தை, அழிவில் - கூட்டம், ஒப்பு, ஒப்பின்மை என்னும் உணர்ச்சிகளாகக் காட்டப்பட்டுள்ளன.

## மெய்ப்பாட்டு உணர்வுகள்

பசி, தாகம், பாலுணர்வு, உறங்குதல், விழித்தல் முதலானவை உயிரினங்களுக்கு உள்ள பொதுவான அகத்தெழுச்சி உணர்வுகள். சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் - ஆகியவந்தும் புறத்தாக்க உணர்வுகள் ஆகும்.

## எண் வகை மெய்ப்பாடுகள்

***நகையே அழுகை இளிவரல் மருட்கை***
***அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று***
***அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப.***
***(தொல்.பொருள். 1197, தமிழண்ணல்)***

தொல்காப்பியர் இன்று நாம் சுவை என்பதை மெய்ப்பாடு என்பார். உள்ளத்திலும் உடலிலும் மெய்ம்மயிர் சிலிர்த்தல், கண்ணீர் அரும்பல், வியர்த்தல் என வெளிப்படும் போது தான், அவை புறத்தார்க்குப் புலனாகின்றன. அவ்வாறு புலனாகும் சுவைகள் எட்டு, நகைச்சுவை, அழுகைச்சுவை, இளிவரற் சுவை, மருட்கைச்சுவை, அச்சச்சுவை, பெருமிதச் சுவை, வெகுளிச்சுவை, உவகைச்சுவை, என்பன அம்மெய்ப்பாடுகள்.

**நகைச்சுவை தோன்றுமிடங்கள்**

**எள்ளல் இளமை பேதமை மடன் என்று**
**உள்ளப்பட்ட நகை நான்கு என்ப.**
**(தொல்.பொருள். 1198 தமிழண்ணல்.)**

ஏளனமாகச் சிரிப்புக்கு ஆளாகி எள்ளி நகையாடல். இளமை காரணமாகத் தோன்றுவன. சிறுபிள்ளைகள் பேச்சும் செயலும் சிரிப்பை விளைவிக்கும். பேதமை - அறிவின்மை. மடன்- அறிந்தும் அறியாதது போல ஆதல் ஐயுறுதல், ஒன்றை மற்றொன்றாக உணர்தல். பேதைமை - முழு அறியாமை. இவை நகைச்சுவையை விளைவிப்பன.

அழுகைச்சுவை தோன்றுமிடங்கள்:-

**இளிவே இழவே அசைவே வறுமை என**
**விளிவில் கொள்கை அழுகை நான்கே.**
**(தொல்.பொருள். 1199 தமிழண்ணல்)**

அழுகை என்னும் அவலச்சுவை தோன்றக் காரணமானவை. பிறரால் தாழ்வுபடுத்தப்பட்டு எளியராய் நிற்றல். இழவு - பொருள் இழப்பு. உயிரிழப்புப் போல்வன. அசைவு - செல்வராக இருந்த நிலைகெட்டு வறியராதல், உயர்ந்த நிலையிலிருந்தவர் தாழ்வுபடுதல், வறுமை இவை அவலம் தோன்ற அடிப்படைக் காரணங்கள்.

**இளிவரல் சுவை தோன்றுமிடங்கள்**

**மூப்பே பிணியே வருத்தம் மென்மையோடு**
**யாப்புற வந்த இளிவரல் நான்கே.**
**(தொல்.பொருள். 1200. தமிழண்ணல்)**

பிறரால் அவமானப்படுத்தப்பட்டு தாழ்த்தப்படுதல். வயது முதிர்ந்தவர்களை இகழ்வோடு பார்ப்பவர் பலர். தீராத பிணியால் ஒருவன் இழிவாக நடத்தப்படுவான். பயனற்ற முயற்சிகளால் இளிவுற நேரும். வலிமையின்றித் தோற்பதால் இளிவுண்டாகும்.

**மருட்கைச் சுவை தோன்றுமிடங்கள்**

**புதுமை பெருமை சிறுமை ஆக்கமொடு**
**மதிமை சாலா மருட்கை நான்கே.**
**(தொல்.பொருள். 1 201. தமிழண்ணல்)**

புதுமை என முன்பு காணாததைக் கண்டாலும் மனம் மருளும் வியப்புண்டாகும். அளவு கடந்தது பெரிதாயிருப்பன, மிக மிக நுண்ணிதாய் இருப்பன, ஒன்றனிடம் காணப்படும் புதிய ஆக்கம், மாற்றம். இவை அறிவுக்கு எட்டாத அளவு முன்பு காணாதவையாய்ப் புதிதாய்க் காணப்படின் வியப்புத் தோன்றும்.

**அச்சச்சுவை தோன்றுமிடங்கள்**

**அணங்கே விலங்கே கள்வர் தம் இறை எனப்**
**பிணங்கல் சாலா அச்சம் நான்கே**
**(தொல்.பொருள். 1202. தமிழண்ணல்)**

தெய்வம் எனவும் பேய் எனவும் நம்பி அஞ்சுதல், சிங்கம்புலி கரடி வெறி நாய்களுக்கு அஞ்சுதல். திருடர்களுக்கு அஞ்சுதல். தமக்கு மேலதிகாரிகளுக்கு அஞ்சுதல். தம் இறை என்ற தன் நுட்பம் அவரவர் அவர்களுக்கு மேலேயுள்ளவர்களுக்கு அஞ்ச நேரும் என்பதாம்.

**பெருமிதச்சுவை தோன்றுமிடங்கள்**

**கல்வி தறுகண் இசைமை கொடை எனச்**
**சொல்லப் பட்ட பெருமிதம் நான்கே.**
**(தொல்.பொருள். 1203. தமிழண்ணல்)**

பிறரெலாம் வீரம் என்றதைத் தொல்லாசான் பெருமிதம் என்றார். பிறருடன் ஒப்ப நில்லாது, அவர்களை விட மேம்படுதல். கல்வியால், வீரத்தால், புகழால், கொடையால் பெருமிதம் தோன்றும்.

**வெகுளிச்சுவை தோன்றுமிடங்கள்**

**உறுப்பறை குடிகோள் அலை கொலை என்ற**
**வெறுப்ப வந்த வெகுளி நான்கே.**
**(தொல்.பொருள். 1204. தமிழண்ணல்)**

வெகுளிச்சுவை கடுஞ்சீற்றம். கைகால்களை வெட்டுதல் போன்ற துன்புறுத்தும் செயல்களால் ஒருவன் சீற்றங் கொள்ள நேரும். குடி மக்களை வருத்துதல், அவர்கள் செல்வத்தை வரி அது இது என்று கொள்ளுதற்கு அதிகாரிகளும் அரசுகளும் முயலுதல். அலைத்தல்-தடி கொண்டு அடித்தல், வைதல்

முதலியன. கொலை - கொல்ல முயலுதல். இவற்றால் பிறப்பது சீற்றமெனும் மெய்ப்பாடு

**உவகைச்சுவை தோன்றுமிடங்கள்**

***செல்வம் புலனே புணர்வு விளையாட்டு என்று***
***அல்லல் நீத்த உவகை நான்கே***
***(தொல்.பொருள். 1205. தமிழண்ணல்)***

உவகைச்சுவை இன்ப நுகர்ச்சி. பிறரைத் துன்புறுத்தி அடையும் மகிழ்ச்சியல்லாத, இயல்பான நெறிப்பட்ட மகிழ்ச்சி இது. இது செல்வமுடைமையாலும் அதனை நுகர்தலாலும் வரும். புலன் - ஐம்புல நுகர்ச்சிகள். அரிய காட்சிகள், இசை கேட்டல் போல்வன. புணர்வு- காம இன்ப நுகர்ச்சி. விளையாட்டு- ஆறும் குளமும் காவும் சென்று துணையுடன் ஆடிப்பாடி மகிழ்தல். பொதுவான விளையாட்டுக்களும் இதிலடங்கும்.

**முடிவுரை**

ஒரு படைப்பு படிப்பவருக்கு ஆர்வத்தையும், இன்பத்தையும், உணர்ச்சியையும் தூண்டும் வண்ணம் அமைய மெய்ப்பாட்டில் கூறப்பட்ட அத்தனைச்சுவையும் போதுமானது ஆகும்.

**பார்வை நூல் பட்டியல்**

1. தொல்காப்பியம், பொருளதிகாரம் (தொகுதி - 2) முனைவர் தமிழண்ணல். மணிவாசகர் பதிப்பகம், 31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை.
2. தொல்காப்பியம், பொருளதிகாரம், இளம்பூரணனார் உரை, சாரதா பதிப்பகம், இராயப்பேட்டை, சென்னை.